**Dated : 08.04.2026**

**O.S.No. 264/2024**

**DW.5 – திரு. பெரியசாமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் விவசாய வேலை பார்க்கிறேன், 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கலைசெல்வி என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். கலைசெல்வி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து கொடுக்க சொல்லி தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து சின்னராஜ் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் அந்த சொத்தை எந்த வருடத்தில் வாங்கினார், அவர் பெயரில் கிரய பத்திரம் ஏற்பட்டிருப்பது சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் சொத்து அவர் வாங்கிய விவரம் தெரியும், ஆனால் எப்போது, எங்கு வாங்கினார் என்று தெரியாது. பத்திரம் அவர் பெயரில் இருப்பது தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயரில் உள்ள பத்திரத்தினை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. தானசெட்டில்மெண்ட் செய்ததாக சொல்லியிருக்கிறேன், ஒவ்வொருவருக்கும் எவ்வளவு சொத்து கொடுத்தார் என்றால் 3860 சதுரடியை மூன்று பங்காக பிரித்து கொடுத்தார். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதும் போது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை.

அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சின்னராஜ் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்து அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். கலைசெல்விக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1993–ல் திருமணம் ஆனது, 5 பவுன் நகை போட்டார்கள். ஜெயலட்சுமிக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் எனக்கு தேதி தெரியவில்லை. பெண்களுக்கு திருமணம் செய்து கொடுத்தால் நகை போடும் வழக்கம் உண்டு என்றால் உண்டு. சின்னராஜ் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு அவருக்கு எந்த சொத்தும் இல்லையா என்றால் அவருக்கு சொத்து உள்ளது, அது சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது. சின்னராஜி–ன் சகோதரர்கள் வழக்கு தொடுத்துள்ளார்கள். சின்னராஜினுடைய அண்ணன் தம்பிகள் வழக்கு கொடுத்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால், அவருடைய மைத்துனரே என்னிடம் கூறினார். சின்னராஜினுடைய அண்ணன் தம்பிகள் போட்ட வழக்கிலேயே சின்னராஜியின் மகன்களுக்கு கொடுத்த சொத்தையும் சேர்த்து வழக்கு கொடுத்துள்ளார்கள்.

கலைசெல்வி பாகம் கேட்கும் சொத்து சின்னராஜிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து, அவர் சொந்தமாக சம்பாதித்த சொத்து அல்ல என்றால் சரிதான்.

**D2, D3 & D4 தரப்பில் குறுக்கு விசாரணை :**

சின்னராஜிக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் அவருடைய மூதாதையர் சொத்து. சின்னராஜிக்கு பாகம் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் ஆமாம்.

**மறு குறுக்கு விசாரணை :**

நான் கொடுத்த வாக்குமூலத்தில் சின்னராஜ் பூர்வீகமாக சம்பாதித்த சொத்து என்று நான் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல, அது அவர்களுடைய அண்ணன், தம்பி பாகம்.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.